தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

நாள் : 08.02.2023

# PRESS RELEASE

## விஸ்கோஸ் ஸ்டேப்பில் பைபர் மீது தீர்வை திணிப்பு

## தமிழ்நாடு விசைத்தறியாளர்கள் பாதிப்பை ஒன்றிய அரசு கவனத்தில் கொண்டுள்ளதா?

## திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி

விஸ்கோஸ் ஸ்டேப்பில் ஃபைபர் (வி.எஸ்.எப்.) மீது வர்த்தகத் தீர்வுகளுக்கான தலைமை இயக்ககம் (டி.ஜி.டி.ஆர்.) சமர்ப்பித்துள்ள தீர்வைத் திணிப்பு பரிந்துரையைக் கைவிடக்கோரி தமிழ்நாடு விசைத்தறி உரிமையாளர்கள் சங்க கூட்டமைப்பிடமிருந்து வேண்டுகோள் கடிதம் ஏதும் ஒன்றிய அரசுக்கு வந்துள்ளதா?

அத்தகைய கடிதம் ஏதும் வந்திருந்தால் அது பற்றிய விவரங்களையும் அதற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள பதில் விவரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் திங்கட்கிழமை கோரினார்.

**இது தொடர்பாக அவர் விடுத்த கோரிக்கை விவரம்:**

விஸ்கோ ஸ்டேப்பில் பைபர் (செயற்கை இழைக்குப் பயன்படும் மரச்சத்து குழைமம்) மீதான தீர்வை திணிப்பை (இறக்குமதி குவிப்பு தடுப்பு வரி) குறிப்பு வரை அகற்றியதன் காரணமாக அதனுடைய ஏற்றுமதி கடந்த 2019- 20 ஆம் ஆண்டில் 25.49 மில்லியன் சதுர மீட்டர் அளவாக இருந்ததில் இருந்து 2021-22 ஆம் ஆண்டில் 61.39 மில்லியன் சதுர மீட்டர் அளவாக அதிகரித்தது. இது பற்றிய விவரம் ஒன்றிய அரசுக்குத் தெரியுமா?

தீர்வைத் திணிப்பு பரிந்துரையை பரிசீலனைக்கு மேற்கொள்வதற்கு முன்பாக மேற்கண்ட விவரங்களை ஒன்றிய அரசு கவனத்தில்

கொண்டுள்ளதா? அவ்வாறெனில் அது தொடர்பான விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

வர்த்தகத் தீர்வுகளுக்கான தலைமை இயக்ககம் (டிஜிடிஆர்) சமர்ப்பித்துள்ள பரிந்துரையை அமல் செய்தால் நாடு முழுவதும் குறிப்பாக தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் விசைத்தறிகள் வேறு வழியின்றி மூடும் நிலை ஏற்படும் என்பதையும் இப் பிரச்சனைக்குத் தீர்வுகாண ஒன்றிய அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதையும் தெரிவிக்க வேண்டும் என்று தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்ரி அளித்த பதில் விவரம் வருமாறு:

தீர்வை திணிப்பைக் கைவிடக் கோரி தமிழ்நாடு விசைத்தறி உரிமையாளர் சங்க கூட்டமைப்பிலிருந்து ஒன்றிய அரசுக்கு வேண்டுகோள் ஏதும் வரவில்லை. எனினும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இதர அமைப்புகளிடமிருந்து இது தொடர்பாக கோரிக்கைகள் வந்துள்ளன. விஸ்கோஸ் ஸ்டேப்பில் பைபர் மீது (இந்தோனேசிய நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுவது அல்லது அந்நாட்டின் மூலம் இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படுவது ) பொருள் குவிப்பு தடுப்பு வரிவிதிக்க வகை செய்யும் வர்த்தகத் தீர்வுகளுக்கான தலைமை இயக்ககம் சமர்ப்பித்துள்ள பரிந்துரையை நிராகரிக்குமாறு அந்த அமைப்புகள் ஒன்றிய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

வர்த்தகத் தீர்வுகளுக்காண தலைமை இயக்ககம் அளித்துள்ள பரிந்துரைகள் கடந்த ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதி வெளியிடப்பட்டது. இந்தோனேசிய நாட்டில் இருந்தோ அல்லது அந்த நாட்டின் மூலமாகவோ இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் விஸ்கோ ஸ்டேப்பில் பைபர் மீது இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் பொருள்குவிப்பு தடுப்புவரி விதிப்பது குறித்து ஒன்றிய அரசு முடிவெடுக்கும்.

******